1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எண்ணெய், கடலை, புண்ணாக்கு எதையும் நாம் தடுப்பதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள்.

விவசாயிகளுக்கு டீஸல் என்ஜின்கள் வழங்கல்

**385 வினா—திரு. கே. எ. வகாப்:* மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள தன்காரணமாக விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின்களை கடனாக வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ஆம். தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறை காரணமாகவும் மற்றும் நடைமுறை சம்பந்தமான தாமதம் முதலிய காரணங்களால் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கும் விவசாயிகளுக்காக டீசல் என்ஜின்கள் வழங்க அரசு ஒரு திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் அமுல்படுத்தி வருகின்றது

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு தமிழ்நாடு அக்ரோ என்சினியரிங் அண்டு சர்விஸ் கோவாப்பரேட்டிவ் பெடரேஷன் எனும் நிறுவனம் டீசல் பம்பு செட்டுகள் வழங்குகிறது. இப்படி வழங்கப்படும் டீசல் என்ஜின்கள் 31—12—1974-க்குள் மின் இணைப்பு கிடைக்கப்படுவதுடன் மின் மோட்டார்கள், டீசல் என்ஜின்களுக்குப் பதிலாக விவசாயிகளுக்கு கூடுதல் செலவில்லாமல் தயாரிப்பாளர்களே வழங்குவார்கள். இத்திட்டப்படி ஒவ்வொரு டீசல் என்ஜினுக்கும் ரூ. 1,000 மானியமாக (subsidy) வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் முழுவதும் 10,000 என்ஜின்கள் இத்திட்டப்படி வழங்க அரசு அனுமதி அளித்திருக்கிறது. இத்திட்டப்படி 15—11—1973 வரை 3,975 டீசல் என்ஜின்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

[1973 நவம்பர் 24

திரு. கே. எ. வகாப் : இப்பொழுது விவசாயிகளுக்கு வழங்கப் படுகிற டீசல் என்ஜின்களுக்காக 1,000 ரூபாய் மானியம் வழங்கப் படுவதாகச் சொன்னுர்கள். அந்த மானியம் எல்லா மாவட்டங் களிலே உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறதா ? உற்பத்தியைப் பெருக்கி வருகின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ளவர் களுக்கும் அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைத்தான் நான் குறிப்பிட்டேன், 3,975 என்று. எல்லா மாவட்டங்களுக்குந் தான் வழங்கப்படுகிறது. வட ஆற்காடுக்கு 22 எஞ்சின்கள், செங் கற்பட்டுக்கு 11, திருச்சிக்கு 304, தென் ஆற்காடு 973, மதுரை 108, இராமநாதபுரம் 7, சேலம் 151, தர்மபுரி 177, தஞ்சாவூர் 2,090, திரு நெல்வேலி 117, கன்னியாகுமரி 10 என்ற அளவில் வழங்கப்பட்டு இருக்கின்றன.

வந்தவாசி வழியாக விரைவுப் பேருந்துகள்

* 386 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

சென்னையிலிருந்து நாகப்பட்டினம், திருச்சி செல்லும் துரித வண்டிகளை வந்தவாசி நகரின் (வட ஆர்க்காடு) வழியாக செல்லச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இது நீண்டநாளையக் கோரிக்கை. இங்கே வந்தவாசி, காஞ்சிபுரம், திண்டிவனம் ஆகிய ஊர்களை இணைப்பதற்கு நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. ஆகவே, அரசு துரித வண்டிகளை நாகூர் போன்ற இடங்களுக்கு—நாகூர் ஒரு புனித ஸ்தலமாக இருப்பதால் அதிகமாகப் பிரயாணிகள் செல்வ தற்கொ வாய்ப்பு இருக்கிறது, எனவே, அரசு இதையெல்லாம் பரிசிலனை செய்து விரைவுப் பேருந்துகள் அவ்வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் கூடுமானவரையில் நேரான வழித்தடங்களிலே விடுவதுதான் சாலப் பொருத்தமான தாகும். அந்த நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 24 கிலோமீட்டர்